செய்திவெளியீடுஎண்:58 நாள்:27.01.2021

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு அரசு நிறுவனமான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் பெருமளவில் இந்திய பணியாளர்களை குறிப்பாக தமிழக பணியாளர்களை 1978-ம் ஆண்டு முதல் பல்வேறு நாடுகளில் பணியமர்த்தி வருகிறது.

தற்போது இங்கிலாந்து நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளில் (National Health Services) பணிபுரிய குறைந்தபட்ச 6 மாத அனுபவம் உள்ள Diploma அல்லது B.Sc Degree பயின்ற (ஆண் மற்றும் பெண்) செவிலியர்கள் பெருமளவில் தேவைப்படுகிறார்கள். மேற்காணும் பணிக்கு IELTS (International English Language Testing System) (Band 7.0) அல்லது OET (Occupational English Test) (Grade-B) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் செவிலியர்களுக்கு ரூ.2,00,000/- முதல் ரூ.2,50,000/- வரை மாதச் சம்பளம், இலவச விசா, விமான டிக்கெட் மற்றும் இங்கிலாந்து நாட்டின் சட்டதிட்டத்திற்குட்பட்ட இதர சலுகைகளும் வழங்கப்படும்.

எனவே IELTS/OET பயிற்சி நிறுவனங்கள் மூலமாக பெறப்படும் IELTS/OET தேர்ச்சி பெற்ற செவிலியர்களை பெருமளவில் இங்கிலாந்து நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளில் பணியமர்த்த இந்நிறுவனம் முடிவு செய்துள்ளது.

இதற்கான விண்ணப்பம் மற்றும் விரிவான விதிமுறைகள் அடங்கிய விவரங்கள் www.omcmanpower.com என்ற இந்நிறுவன வலைதளத்தில் அளிக்கப்பட்டுள்ளது.

விருப்பமுள்ள IELTS / OET பயிற்சி நிறுவனங்கள், இந்நிறுவன வலைதளத்தில் அளிக்கப்பட்டுள்ள படிவங்களை பூர்த்தி செய்து 12.02.2021-க்குள் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், எண்.42. ஆலந்தூர் சாலை, திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை 600 032 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

**முதன்மை செயலாளர் /**
**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்**
**அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**